## 21.3 பேரூராட்சி மற்றும் நகராட்சியில் உள்ள ஊராட்சி ஒன்றிய சொத்துக்கள் பராமரிப்பு

நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் (பேரு.1) துறை

அரசாணை (நிலை) எண். 131 நாள் : 23.5.1997

படிக்க :

1. அரசாணை (நிலை) எண்.298, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.20.11.96.
2. அரசு கடிதம் எண்.3987/பேரு.1/97.6, நாள்.11.4.97.
3. குளித்தலை ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவரின் 19.3.97 நாளிட்ட கடிதம்.

**ஆணை**

பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், பேருராட்சிகளின் எல்லைக்குள் தற்போது ஊராட்சி ஒன்றியங்களால் பராமரிக்கப்பட்டு வரும் சொத்துக்களை மேற்கொண்டு பராமரிக்கும் பொருட்டு உடனடியாக அந்தந்த பேரூராட்சிகளுக்கு ஒப்படைக்க வேண்டும் என ஆணையிடப்பட்டது.

2. அரசு ஆணை (நிலை) எண்.298, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.20.11.96ல் அரசு வெளியிட்டுள்ள ஆணையினால் ஊராட்சி ஒன்றியங்களில் ஏற்படும் நிர்வாக சிக்கல்களைக் கருத்தில் கொண்டு, பேரூாட்சி எல்லைக்குள் உள்ள ஊராட்சி ஒன்றியங்களுக்குச் சொந்தமான கட்டிடங்கள், அலுவலகங்கள், போன்ற சொத்துக்கள், தற்போது ஊராட்சி ஒன்றிய பராமரிப்பில் இருந்தால், அவைகளை ஊராட்சி ஒன்றியமே தொடர்ந்து பராமரிக்கலாம் என்றும் பேரூராட்சி எல்லையிலுள்ள பொதுச் சொத்துக்களான சாலை, சந்தை, பாலம், போன்றவற்றைப் பேரூராட்சிக்கு மாற்ற வேண்டும் என்றும் பார்வை இரண்டில் படிக்கப்பட்ட அரசு கடிதத்தில் பின்னர் தெளிவுரை வழங்கியுள்ளது.

3. இதனைத் தொடர்ந்து குளித்தலை ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர் தனது 19.3.97 நாளிட்ட கடிதத்தில் பத்தி 1ல் கூறப்பட்டுள்ள அரசாணையினால் குளித்தலை ஊராட்சி ஒன்றியத்திற்கு மிகுந்த வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது என்றும் தற்போது குளித்தலை – முசிறி பாலத்தில் ஊராட்சி ஒன்றியம் சுங்கம் வசூல் செய்வதற்கு குளித்தலை நகராட்சி நீதிமன்றத்தில் தடையாணை பெற்றுள்ளதால் அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது என்றும் எனவே இந்த அரசு ஆணையை ரத்து செய்யுமாறு அரசைக் கேட்டுள்ளார். இதுபற்றி மேற்கொண்டு பரிசீலனை செய்யப்பட்டது.

4. பார்வை 2ல் உள்ள தெளிவுரையின் காரணமாக, குளித்தலை ஊராட்சி ஒன்றியத்தால் பராமரிக்கப்பட்டு வரும் சமுதாய மன்றம், திருமணக் கூடம், தச்சு மற்றும் கொல்லு அலகு, தொழிற்கூடங்கள் போன்றவைகள் இந்த ஊராட்சி ஒன்றிய பராமரிப்பிலேயே தொடர்ந்து செயல்படும்.

5.பேரூராட்சிகளைப் போன்று நகராட்சி எல்லைக்குள் உள்ள ஊராட்சி ஒன்றியங்களால் பராமரிக்கப்படும் சாலை, சந்தை, பாலங்கள் போன்ற பொதுச் சொத்துக்களையும் நகராட்சிக்கு வழங்கப்படல் வேண்டும் என அரசு முடிவெடுத்துள்ளது. எனவே, நகராட்சி எல்லைக்குள் உள்ள ஊராட்சி ஒன்றியங்களால் பராமரிக்கப்படும் கட்டிடங்கள், அலுவலகங்கள், முதலானவற்றை ஊராட்சி ஒன்றியங்களே தொடர்ந்து பராமரிக்கலாம் என்றும், நகராட்சி எல்லைக்குள் உள்ள ஊராட்சி ஒன்றியங்களினால் தற்போது பராமரிக்கப்படும் வரும் சாலை, சந்தை, பாலம், போன்ற பொதுச் சொத்துக்கள் அனைத்தும் உடனடியாக நகராட்சிகளின் பராமரிப்பிற்கு மாற்றப்படல்வேண்டும் என்றும் அரசு ஆணை இருக்கின்றது. இதனடிப்படையில் குளித்தலை நகராட்சி எல்லையில் உள்ள குளித்தலை–முசிறி பாலம், குளித்தலை நகராட்சியின் பராமரிப்பிற்கு உடனடியாக மாற்றப்படல் வேண்டும் என்றும் அரசு ஆணை இடுகின்றது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**எஸ். மாலதி**
அரசு செயலாளர்